மாலை முரசு

பக்கங்கள் 14+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 28 திங்கட்கிழமை 10.02.2025 | அதிர்வு 193

## தையிட்டி மக்களின் போராட்டத்துக்கு ஈ.பி.டி.பியும் ஆதரவு



தையிட்டி விகாரை தொடர்பில் காணி உரிமையாளர்களினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள

02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தையிட்டி விகாரை உடைக்கப்பட வேண்டும்

## ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி முழு ஆதரவு என்கிறார் செல்வம் எம்.பி.

(கி.வசந்தன்)

யாழ். தையிட்டி விகாரை உடைக்கப்பட வேண்டும் என்றும், அதற்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டத்துக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி முழுமையான ஆதரவு வழங்கும் என்றும் அந்தக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பின தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான

02▶



# தையிட்டி விகாரையில் தமிழர்கள் எவரும் கைவைக்க இடமளியோம்!

## போராட்டம் நடத்தி எங்களை மிரட்ட முடியாது என்று கம்மன்பில எச்சரிக்கை





யாழ். தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ ராஜமகா விகாரையில் தமிழர்கள் எவரும் கைவைக்க இடமளிக்கமாட்டோம் என்று பிவிதுரு ஹெலஉறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

02▶

## மீண்டும் நாளாந்த மின்வெட்டு

### இன்று முதல் அமுல்

இன்றும் நாளையும் நாளொன்றில் தலா ஒன்றரை மணிநேரம் சுழற்சி முறையில்

02▶

# தையிட்டி விகாரையை உடைக்கவே முடியாது!

## புத்தசாசன அமைச்சர் திட்டவட்டம்



“யாழ்ப்பாணம் – தையிட்டியில் அமைந்துள்ள விகாரையை அந்த இடத்தில் இருந்து அகற்றவே முடியாது. அந்த விகாரை எந்தக் காணியில் அமைக்கப்பட்டுள்ளதோ அந்தக் காணி உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணி வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.”

– இவ்வாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனெவி தெரிவித்தார்.

02▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தையிட்டி மக்களின்...

அமைதி வழிப் போராட்டத்துக்கு ஆதரவை வழங்குவதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

“தையிட்டிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ ராஜமகா விகாரை என்பது சட்ட ரீதியான அனுமதிகள் எவையும் பெற்றுக்கொள்ளப்படாமல், எமது மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த தனியார் காணிகளில் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் பூர்வீக நிலங்களை இழந்துள்ள மக்கள் தங்களுடைய காணிகளை மீட்பதற்குத் தொடர் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் எம்மால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

எந்தவொரு விடயத்தையும் நடைமுறைச் சாத்தியமான வழியில் அணுகுகின்றவர்கள் என்ற அடிப்படையில், குறித்த விகாரை அமைந்துள்ள பகுதியை அளவீடு செய்து, முதற்கட்டமாக, அப்போது விகாரைக் கட்டுமானங்கள் அமைந்திருந்த சிறு பகுதியைத் தவிர ஏனைய பகுதிகளை விடுவிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னடுத்திருந்தோம்.

அதற்கு, பாதுகாப்பு அமைச்சு, படைத்தரப்பு மற்றும் சம்மந்தப்பட்ட விகாராதிபதி போன்றோர் சம்மதமும் தெரிவித்திருந்தனர்.

எனினும், அளவீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு சில தரப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், அளவீட்டுப் பணிகள் பல தடவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

அக்காலப் பகுதியில் தேர்தல் அறிவிப்புக்கள் வெளியாகி, ஆட்சி மாற்றங்கள் இடம்பெற்றமையால், துரதிஷ்டவசமாக எம்மால் அந்தப் பணிகளை நிறைவேற்ற முடியவில்லை.

எனினும், மக்களுடைய காணிகள் மக்களுக்கே சொந்தம் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

திஸ்ஸ ராஜமகா விகாரை அமைந்துள்ள பகுதி மாத்திரமன்றி, வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், பாதுகாப்பு தரப்பு போன்றவற்றினால் கையகப்படுத்தப்பட்டுள்ள அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும் என்பதே எமது திடமான நிலைப்பாடாக இருக்கின்றது.

அந்த அடிப்படையில், காணி உரிமையாளர்களினால் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள அமைதி வழிப் போராட்டத்துக்குப் பூரண ஆதரவை வழங்கவுள்ளோம்.” - என்றுள்ளது.

## தையிட்டி விகாரையில்...

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“யாழ்ப்பாணம் - தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ ராஜமகா விகாரை சிங்கள - பௌத்தர்களுக்குச் சொந்தமானது. இந்த விகாரை அமைந்துள்ள காணியும் தற்போது விகாரை நிர்வாகத்துக்கே உரித்தானது.

எனவே, இந்த விவகாரம் தொடர்பில் கதைப்பதற்குத் தமிழ் மக்களுக்கும், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் எந்த அருகதையும் கிடையாது.

தையிட்டி திஸ்ஸ ராஜமகா விகாரையை இடிக்க வேண்டும் என்று கூச்சலிடும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இந்த விடயங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த விகாரையில் தமிழர்கள் எவரும் கைவைக்க இடமளிக்கமாட்டோம். இந்த விகாரைக்கு எதிராகப் பௌர்ணமி தினத்தன்று தமிழர்கள் போராட்டம் நடத்தி எம்மை மிரட்ட முடியாது.” - என்றார்.

## மீண்டும் நாளாந்தம்...

மின் விநியோகத் தடையை அமுல்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது.

இன்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பான யோசனை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நேற்று நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட திடீர் மின்தடையையடுத்து, நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்று மின் உற்பத்தி இயந்திரங்களும் செயலிழந்துள்ளன.

குறித்த இயந்திரங்களை மீண்டும் தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பதற்குச் சுமார் 4 நாட்களாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த இயந்திரங்களின் செயலிழப்பினால் தேசிய மின் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள சமநிலையற்ற தன்மையை முகாமை செய்து, மின்சக்தியைப் பங்கீடு செய்யும் நோக்கில் மின்வெட்டை அமுல்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பிற்பகல் 3.30 முதல் இரவு 9.30 வரையான காலப்பகுதியில் இந்தச் சுழற்சி முறையிலான மின் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவுள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, யு,டீ,ஊ,னு ஆகிய வலயங்களில் பிற்பகல் 3.30 முதல் 4 மணிக்குள் மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு 5 மணி முதல் 5.30 வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும்.

E,F,G,H,U,V ஆகிய வலயங்களில் பிற்பகல் 5 மணி முதல் 5.30க்குள் மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு மாலை 6.30 முதல் 7 மணி வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

I,J,K,L,P,Q ஆகிய வலயங்களில் மாலை 6.30 முதல் 7 மணி வரை மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு இரவு 8 மணி முதல் 8.30 வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும்.

R,S,T,Wஆகிய வலயங்களில் இரவு 8 மணி முதல் 8.30 வரை மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு இரவு 9.30 முதல் 10 மணி வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

---

## தையிட்டி விகாரை...

கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் இன்று இடம்பெற்றது. அதன்பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், “யாழ். தையிட்டி விகாரைக்கு எதிராக இடம்பெறும் போராட்டத்துக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி முழுமையான ஆதரவைத் தெரிவிக்கும். அது உண்மையில் உடைக்கப்பட வேண்டிய விடயம்.

வடக்கு, கிழக்கில் பிக்குகள் மற்றும் சில திணைக்களங்கள் நினைத்ததைச் செய்யும் ஒரு நிலை காணப்படுகின்றது. எனவே, இந்த விகாரை உடைக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அதற்கான ஆதரவை நாங்கள் வழங்குவோம். மக்களுடைய விருப்பமும் அதுவே.” - என்றார்.

---

## தையிட்டி விகாரையை...

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“நாட்டில் அமைந்துள்ள எந்த மதத் தலங்களையும் அகற்ற முடியாது. அது மத ரீதியான, இன ரீதியான வன்முறைகளுக்கே வழிவகுக்கும்.

மதத் தலங்களை வைத்துக்கொண்டு அரசியல் செய்வதை கட்சிகள் உடனடியாக நிறுத்த வேண்டும்.

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்களுடன் வடக்கு மாகாண ஆளுநர் ஏற்கனவே நேரில் பேச்சு நடத்தியுள்ளார். அவர்கள் இணக்கமான தீர்வுக்கு வர சம்மதம் தெரிவித்துள்ளார்கள். பலர் மாற்றுக் காணிக்குச் சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில், காணி உரிமையாளர்களைத் திசை திருப்பி அவர்களைத் தங்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குப் பயன்படுத்தச் சிலர் முற்படுகின்றனர்.” - என்றார்.

# மாகாண சபை முறைமையில் அரசு கைவைக்கவே மாட்டாது!

## தேர்தல் உறுதி என்கிறார் அமைச்சர் சந்திரசேகர்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

“மாகாண சபை முறைமை என்பது தாம் வென்றெடுத்த உரிமை என்று தமிழர்கள் கருதுவதால் அந்த உரிமையில் தேசிய மக்கள் சக்தி அரசு கை வைக்காது. இவ்வருட இறுதியில் அல்லது அடுத்த வருடம் முற்பகுதியில் மாகாண சபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும்.”

– இவ்வாறு யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

“மக்களுக்கான எமது நேர்வழி அரசியல் பயணத்தின்போது எதற்கும் அஞ்சி, அடிபணியப்போவதில்லை. போற்றுவோர் போற்றட்டும், தூற்றுவோர் தூற்றட்டும். ஏனெனில் மக்கள் சக்தி எமது பக்கம்” – என்றும் அவர் கூறினார்.

சீனா மற்றும் இலங்கை நாட்டின் நட்புறவின் பயனாக “சீனாவின் சகோதர பாசம்” எனும் வாசகத்துடன் யாழ். மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குச் சீனா நாட்டின் உதவியில் உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு இன்று யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்ட செயலாளர் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கலந்துகொண்டதோடு, சிறப்பு அதிதியாக இலங்கைக்கான




சீனத் தூதரகத்தின் பிரதி பொறுப்பதிகாரி ஜு யான்வேய், அதிதியாக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோர் கலந்துகொண்டு யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 1070 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் அதிகாரிகள், ஏனைய உத்தியோகத்தர்கள், சீனத்தூதரகத்தின் ஏனைய அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-


“சீனாவின் சகோதரப் பாசம் தொடர வேண்டும். தேசிய மக்கள் சக்தி ஆட்சி பீடம் வந்து 80 நாட்களுக்கு மேல் ஆகின்றது. இக்காலப்பகுதிக்குள் நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்துக்கான அடித்தளம் இடப்பட்டு வருகின்றது. இதற்குரிய ஆணையை வழங்கிய மக்களுக்கு எமது நன்றிகள்.

யாழ். மக்களும் தேசிய மக்கள் சக்தியை முதன்மைக் கட்சியாக தெரிவு செய்துள்ளனர். அதற்காக மீண்டும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வறுமை ஒழித்தல், டிஜிட்டல் மயமாக்கல் உட்பட ஒட்டுமொத்த நாட்டையும் மேம்படுத்தவதற்கான திட்டமே தூய்மை ஸ்ரீலங்கா திட்டமாகும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் வரும் மாகாண சபை முறைமை நீண்டு நிலைக்கக்கூடிய நிரந்தர தீர்வு என நாம் நம்பவில்லை. எனினும், மாகாணசபை முறைமையை தமக்கு கிடைத்த உரிமையாக தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

எனவேதான் மாகாண சபை முறைமை மீது கைவைக்காதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாகாண சபை முறைமையை அர்த்தமுள்ள முறைமையாக மாற்றியமைப்போம். இந்த வருடத்துக்குள் அல்லது அடுத்த வருடம் முற்பகுதியில் அதற்கான தேர்தல் நடத்தப்படும்.

சிறுபான்மையின மக்கள் உட்பட நாட்டு மக்களின் உரிமைகளை நிலைநாட்டுகின்ற புதிய அரசமைப்பு கொண்டு வரப்படும்.” – என்றார்.





# கோர விபத்தில் நால்வர் சாவு!

## 28 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்

குருணாகல், தோரயாய பகுதியில் இரண்டு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் உயிரிழந்ததுடன் 28 பேர் காயமடைந்துள்ளனர்.

பஸ் ஒன்று அதிவேகமாக இயக்கப்பட்டதன் காரணத்தினாலே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் மூத்த பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக மனதுங்க தெரிவித்தார்.

கதுறுவெலவில் இருந்து குருணாகல் நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று தோரயாய பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த வேளையில், மாதுறுஓயாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று குறித்த பஸ்ஸின் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 28 பேர் குருணாகல் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், அவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் குருணாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மந்தியால் வந்த வினை!

'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவேன் என்றானாம்.'

இலங்கையில் டிஜிட்டல் பொருளாதரத்தின் அபிவிருத்தி குறித்து அரசுத் தலைவர்கள் மாறி மாறி வாயால் அளப்பதை பார்க்கும் போது இந்த பழமொழிதான் நினைவு வருகின்றது.

ஒரு குரங்கினால் முழு நாட்டினதும் மின் கட்டமைப்பையே சீரழிகச் செய்ய வைக்க முடியும் என்ற மோசமான கட்டத்தில் நாட்டின் மின் வலையமைப்பை வைத்துக்கொண்டு டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி நாடு முன்னேறுகின்றது என்று பிரலாபிப்பது வெறும் பிதற்றலன்றி வேறில்லை.

பாணந்துறையில் உள்ள மின்விநியோக நிலையத்திலும் புகுந்த குரங்குக் கூட்டம் ஒன்று அங்கு தங்களுக்குள் கைகலப்பில் ஈடுபட்டது என்றும், அச்சமயம் குரங்கு ஒன்று பிரதான மின்மாற்றி விநியோக கம்பியில் மோதியதை அடுத்து மின்சுற்று வட்டத்தில் உடனடி ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு நாடு முழுவதும் மின்வெட்டுப் பாதிப்புக்கு உள்ளாகியது என்றும் ஒரு விளக்கம் கூறப்படுகிறது.

ஆயினும், ஒரு குரங்கின் நேரடித் தாக்கத்தினால் முழு நாட்டினதும் மின்விநியோகம் முழுமையாக தடைப்படும் என்ற கருத்தை சம்பந்தப்பட்ட நிபுணர்கள் உட்பட பலரும் இன்னமும் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த மின்தடைக்கான காரணம் முழுமையான விசாரணையின் பின்னரே தெளிவாகும் என்றும் கருதப்படுகிறது.

ஆயினும், சுமார் ஐந்து மணி நேரத்துக்கு மேல் முழு நாட்டையும் மின்வெட்டுக்குள் உள்ளாக்கிய இந்த சம்பவத்தினால் நாடு பெரும் பொருளாதாரபாதிப்புக்கும் இழப்புகளுக்கும் உள்ளாகி இருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

பாணந்துறை மின் விநியோக நிலையத்தில் ஏற்பட்ட பெரும் வெடிப்பின் பின்னர்தான் நாடு முழுவதிலும் மின் தடை ஏற்பட்டது என்பதை அதன் அயல் வட்டாரத்தில் உள்ள மக்கள் உறுதிப்படுத்துகிறார்கள்.

நேற்று மாலை வரை இந்த மின் தடை குரங்கினால்தான் ஏற்பட்டதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை என இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஒரு குரங்கினால் நாட்டின் முழு விநியோகத்தையும் தடைப்படச் செய்ய முடியும் என்ற அளவிற்கு இலங்கையின் மின் வலைமைப்பு மிகப் பழமையானதாக உள்ளது என்று மின்சாரத் துறை நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இலங்கையின் மின்வலைமைப்பை மேம்படுத்த வேண்டிய அவசர, அவசிய நிலமை ஏற்பட்டிருப்பது பற்றி பல தடவைகள் சுட்டிக் காட்டியும் அரசுத் தலைமையும் சக்தி வலு அமைச்சும் உரிய கவனம் செலுத்தவில்லை என மின்சாரத்துறை நிபுணர்கள் வட்டாரத்தில் குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது.

இந்த மின்வெட்டு நிலைமை குறித்து விளக்கமான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும்படி அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கூறி இருப்பதாகவும் அந்த அறிக்கையில் மின்வெட்டுக்கான உண்மையான காரணங்கள் மற்றும் எதிர்காலத்தில் இத்தகைய மின்வெட்டுக்கள் ஏற்படாமல் இருப்பதற்கான தீர்வுகள் பற்றி எல்லாம் விளக்கம் அளிக்கப்படும் என்றும் தெரியவருகின்றது.

அந்த விளக்கத்தில் பல விடயங்கள் தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.

நாட்டின் மின்கட்டமைப்பைப் பாதுகாப்பாகப் பேணுவதற்கு இன்னும் பல விடயங்கள் செய்ய வேண்டியிருக்கின்றன என்பதுதான் யதார்த்த நிலைமையாகும்.



# நல்லூர் கந்தசுவாமி ஆலய புதிதெடுத்தல் நிகழ்வு இன்று

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நெற்புதிதெடுத்தல் (அறுவடை) நிகழ்வு இன்று (10) காலை இடம்பெற்றது.

தைப்பூச தினத்துக்கு முதல் நாள் கொண்டாடப்படும் 'புதிர் தினம்' எனும் இந்த பாரம்பரிய நிகழ்வில் கோவில் அறங்காவலரும் சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய ஆலயத்துக்கு சொந்தமான சாவகச்சேரி மறவன்புலவில் உள்ள வயலுக்குச் சென்றனர்.

அந்த வயலில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று நெல் அறுவடை செய்யப்பட்டு பாரம்பரிய முறைப்படி ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டது.

இவ்வாறு அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து நல்லூர் கந்த சுவாமிக்கு படையல் வைத்து பூசைகள் செய்வது வழக்கம்.

அவ்வாறே இந்த முறையும் படையல் செய்யப்பட்டு பூஜைகளை தொடர்ந்து பக்தர்களுக்கும் அமுது வழங்கப்பட்டது.

இந்த வழிபாட்டு முறை நல்லூர் கந்தசுவாமி கோயிலின் மரபுசார் பண்பாட்டு விழாவாகப் பேணப்பட்டு வருகிறது.

இந்தப் புதிர் விழா 291 ஆவது ஆண்டாக இவ்வருடம் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.














# ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டம்!

(முகமட் இம்ரான்)

‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டம் கிண்ணியா அல்–மினா மகா வித்தியாலத்தில் இன்று (10) அதிபர் எம். வை. ஹதியத்துள்ளாஹ் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

அரச சுற்றறிக்கைக்கு அமைவாக நான்கு வாரத்துக்கு இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் அனைவரும் பாடசாலை அதிபர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து இந்த வேலைத் திட்டத்தை “நேயமான பாடசாலையின் ஊடாக பசுமையான வகுப்பறையை உருவாக்கல்” எனும் தொனிப் பொருளுடன் நடைமுறைப்படுத்தினர்.





# நாடாளுமன்ற உறுப்பினரை கௌரவிக்கும் நிகழ்வுகள்

(கே. எ. ஹமீட் )

கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வு ‘மரத்தின் வேந்தர்களுக்கு மண்ணின் பெருவிழா’ எனும் தொனிப்பொருளில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அட்டாளைச்சேனை மத்திய குழு ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை மீலாத் சதுக்கத்தில் நேற்று (09) நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பத்தாவது நாடாளுமன்றத்தை அலங்கரிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், கட்சியின் பிரதித் தலைவர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ், செயலாளர் எம். நிசாம் காரியப்பர், பிரதித் தேசிய அமைப்பாளர் எம்.எஸ். உதுமாலெப்பை மற்றும் தேசிய இணைப்புச் செயலாளர் எம்.எஸ். நழீம் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் மற்றும் பெருந்திரளான கட்சியின் ஆதரவாளர்கள், பொது மக்கள் கலந்துகொண்டனர்.







# வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டிருந்த யாழ். மாவட்ட மக்களுக்கு சீன உலர் உணவு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வந்த கன மழை காரணமாகப் பாதிப்பை மக்கள் எதிர்நோக்கி இருந்தனர். இந்த மழையின் பாதிப்புக்கு உள்ளான யாழ். மாவட்ட மக்களுக்கென சீன அரசு 1,070 உலர் உணவுப் பொதிகளை வழங்கியது.

சீன அரசின் சகோதர பாசம் செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு இன்று (10) யாழ். மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரம், இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் பிரதித்தூதுவர் சூ ஜன்வை ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உதவிகளை வழங்கி வைத்தனர்.

இந்த உலருணவுப் பொதி வழங்கும் திட்டத்தில் அண்ணளவாக தலா 6,500 ரூபா பெறுமதியுடைய, 06.9 மில்லியன் ரூபா பெறுமதியான 1,070 பொதிகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கென வழங்கப்பட்டன.

இதில் உத்தியோக பூர்வமாக யாழ். பிரதேச செயலகம், நல்லூர் பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு உட்பட்ட 50 பயனாளிக்கு பொதிகள் வழங்கப்பட்டன. ஏனைய பொதிகள் பிரதேச செயலகங்கள் ஊடாகப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வுக்கு வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். மாவட்ட மேலதிக (காணி) அரச அதிபர் ஸ்ரீ மோகனன், இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் அதிகாரிகள், பிரதேச செயலர்கள், நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு உத்தியோகத்தர்கள், கிராம அலு வலர்கள், பயனாளிகள் கலந்து கொண்டிருந்தனர்.














# மாணவர்களை வலுவூட்டும் பசுமை அறிவொளி நிகழ்ச்சி!

## பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நல்லூரில் நடைபெற்றது

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களுக்குச் சூழல் அறிவைப் புகட்டிச் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சூழல் பாதுகாப்பில் அவர்களைப் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடனும், அவர்களின் பன்முக ஆளுமையை விருத்தி செய்யும் நோக்குடனும் பசுமை அறிவொளி என்னும் நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

மாணவர்களை வலுவூட்டுகின்ற இப்பசுமை அறிவொளி நிகழ்ச்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை (09) நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில், “ மாணவர்களுக்குச் சமூக விழுமியங்களைப் போதிப்பதில் பெற்றோரின் பங்கு” என்ற கருப்பொருளில் இந்நிகழ்ச்சி இடம்பெற்றது.

இதில் ஆசிரியர் பார்வையில் வடக்கு மாகாண ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கௌரி முகுந்தனும், உளவளப் பார்வையில் உளவளத் துணையாளர் ஜீவசர்மிலா வேந்தகுமாரும் வளவாளர்களாகக் கலந்துகொண்டு சிறப்புரைகளை ஆற்றியிருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள், அவர்களின் பெற்றோர்களுடன் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் மாணவர்கள் அனைவருக்கும் சூழல் விழிப்புணர்வு நோக்கில் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டிருந்த அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

இதற்கான நிதி அனுசரணையை இலங்கையில் பல்வேறு சமூகப் பணிகளை முன்னெடுத்து வரும் கனடாவைத் தளமாகக் கொண்ட றொறன்றோவின் மனிதநேயக் குரல் அமைப்புவழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த உதவித் திட்டங்கள்

தொண்டைமானாறு, சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாராந்த ஆன்மீக நிகழ்வில், ஆன்மீக அருளுரையை “சைவத் தமிழர் கலா சாரம்” என்ற ஆன்மீகத் தலைப்பில் ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் நிகழ்த்தினார்.

உதவித் திட்டங்களாக, பாரிசவாத நோயால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தை சார்ந்த குடும்பம் ஒன்றுக்கு மருத்துவச் செலவாக 30 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது. அத்துடன் மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வழங்குவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த உதவித் திட்டங்களை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வழங்கினார்.







# ஊடகப் பேரொளி பாரதியின் கூர்மையான பேனா முனை !

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

தமிழ் ஊடகத்துறையில் தனக்கென ஓர் இடத்தை பிடித்துள்ள இராஜநாயகம் பாரதி, ஈழப் போர் இடம்பெற்ற நெருக்கடியான காலத்தில் தனது சிறப்பான ஊடகப் பணியை ஆற்றியிருந்தமை தமிழர் தேசம் ஒரு போதும் மறவாது.

நேரிய பார்வையில் அமைதியான பேச்சும், அதிராத சுபாவமும் பாரதியின் சிறப்பு அடையாளங்களாகும். ஆழமான பார்வைகளால் அனைத்தையும் அறிந்து வைத்திருந்த ஊடகப் பேரொளியாக விளங்கியவர்.

ஈழப் போராட்டம் முனைப்படைந்த காலகட்டத்தில், தமிழ் ஊடகத்துறையில் பாரிய பங்களிப்புச் செய்தவர்களில் ஒருவர் மறைந்த பாரதி இராசநாயகம் ஆவார்.

முரசொலி, வீரகேசரி, தினக்குரல் என்று அவரது பத்திரிகையுலகப் பங்களிப்பு பரந்தது. இளம் எழுத்தாளர்கள் பலரின் படைப்புகளைத் தினக்குரலில் தொடர்ந்து வெளியிட்டு ஊக்குவித்த பெருமைக்குரியவர். அத்துடன் புதிய எழுத்தாளர்கள் பலரின் உருவாக்கத்துக்கு ஊக்குவித்து ஊடகக் களங்களை அமைத்தும் கொடுத்துள்ளார்.

## திருநெல்வேலி மைந்தன்

யாழ்ப்பாணம், திருநெல்வேலியை பிறப்பிடமாகக் கொண்ட பாரதி 1980 களில் ஈழமுரசு பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் ஆரம்பித்தில் பணியாற்றினார். அதன் பின்னர் முரசொலி பத்திரிகை ஆசிரிய பீடத்திலும் பணியாற்றினார்.

1987 இல் பாரதி முரசொலி ஆசிரியர் பீடத்தில் பணிபுரிந்த காலகட்டத்தில், இலங்கை இந்திய ஒப்பந்தம் கையொப்பமாகிய பின்னர் குடாநாட்டில் இருந்து கிழக்கு மாகாணத்துக்கு ஊடகப்பணி காரணமாக சக ஊடகவியலாளர்களுடன் சென்றார். அப்போது ஏற்பட்ட விபத்தில் தனது வலது கையில் பாதிப்புக்கு உள்ளானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈழத் தமிழ் தேசிய ஊடகவியலாளர்களில் முக்கியமான ஒருவராகத் தன்னை பின்னாளில் நிலை நிறுத்திக் கொண்ட பாரதி, 1990களின் பிற்பகுதியில் கொழும்பில், வீரகேசரி பத்திரிக்கையின் ஆசிரிய பீடத்தில் உதவியாசிரியராகப் பணியாற்றினார்.

போர் சூழ்ந்த எண்பதுகளின் பிற்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கில் இருண்ட காலமாக இருந்தபோதிலும், யாழ்ப்பாணத்தில் அதிகமான செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் உருவாதற்கு ஈழப்போராட்டம் அடித்தளமிட்டது.

மறைந்த ஊடகர் பாரதி ஒரு பணியின் போது தனது வலது கையை இழந்ததன் மூலம் பெரும் விலையை செலுத்த வேண்டியிருந்தாலும், தொடர்ந்துபல காலம் ஊடகராக பணியாற்றி வந்தார். வடக்கில் மாத்திரமன்றி, அனைத்து தடைகளையும் துணிச்சலுடன் கடந்து கொழும்பிலும், ஒரு பத்திரிகையாளராக தொடர்ந்து பிரகாசித்தார்.

## தினக்குரல் பாரதி

1997ஆம் ஆண்டு தினக்குரல் பத்திரிகை தோற்றம் பெறவே அதில் தன்னை இணைத்துக் கொண்ட பாரதி ஞாயிறு தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக 2021 ஆம் ஆண்டுவரை பணிபுரிந்ததுடன் தினக்குரல் இணையத்தள ஆசிரியராகவும் இருந்தார்.

தினக்குரலில் மூத்த ஆசிரியர்களில் ஒருவராக அவரது பதவிக்காலம் மேலும் பிரகாசித்தது. அத்துடன் இலங்கை தமிழ் ஊடக கூட்டணியின் தலைவராகவும் செயற்பட்டார்.

இலங்கையின் ஊடக சுதந்திரம் மற்றும் தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களில் அவர் முக்கியமான பங்கையும் வகித்தார்.

2020களின் இறுதியில் மீண்டும் தனது மண்ணுக்குத் திரும்பிய பாரதி, ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியராக பணியாற்றினார். இறுதியில் வீரகேசரியின் வடபிராந்திய பதிப்பின் ஆசிரியராகப் பணிபுரிந்த வேளையிலேயே காலமானார்.

ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் ஆர். பாரதி, அபிமன்யு, பார்த்திபன் ஆகிய பெயர்களில் பல்வேறு கட்டுரைகளை எழுதிவந்தார். சர்வதேச ஊடகங்களுக்கும் அரசியல் கருத்துகளையும் செவ்விகளையும் வழங்கி வந்தார்.

தாயகத்தில் பல மாவட்டங்களிலும் நடத்தப்பட்ட ஊடக பயிற்சிப் பட்டறைகளிலும் பணியாற்றி இளம் மாணவர்களுக்கு ஊக்கம் அளித்து, பயிற்சிகளை வழங்கியுள்ளார்.

ஊடகர் பாரதியின் பணியை கௌரவிக்கும் வகையில் பெப்ரவரி 2012 வெளியான மல்லிகை இதழ், இவரைப்பற்றிய சிறப்பிதழாக வெளியிடப்பட்டது.

தாயகத்தில் கடந்த சில வாரங்களாக நோய் வாய்ப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று (09) தனது வீட்டில் காலமானார்.

அவரது மறைவு இலங்கை ஊடக சகோதரத்துவத்துக்கும் தமிழ் ஊடகங்களுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். தமிழ் ஊடகத்துறையில் நிரப்ப முடியாத வெற்றிடமாய் பாரதியின் நினைவு கனத்துக் கிடக்கின்றது.



# காணி பிரச்சினை தொடர்பில் திருமலையில் தெளிவூட்டல்!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் காணி தொடர்பிலான பிரச்சினைகள் மற்றும் அது தொடர்பிலான தீர்வுகளை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்பது பற்றி, பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் நேற்று (10) அகம் மனிதாபிமான வள நிலையத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்டத்தின் குச்சவெளி, மூதூர், கிண்ணியா, பட்டினமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மூவின, பயிர்செய்கை காணிகள் மற்றும் குடியிருப்பு காணிகள் தொடர்பில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் பொது மக்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

இந்தக் கலந்துரையாடலுக்குச் சூழலியல் நீதிக்கான மக்கள் ஒன்றிப்பு என்ற தன்னார்வ தொண்டர் அமைப்பும் தனது அனுசரணையை வழங்கி இருந்தது.



வளவாளர்களாகக் கிழக்கு மாகாண முன்னாள் பிரதி காணி ஆணையாளர் க.ரவிராஜன் மற்றும் அகம் நிறுவனத்தின் சட்ட ஆலோசகர் ச.சந்திரகுமார் ஆகியோர் விளக்கவுரைகளை வழங்கினர்.







# இராமகிருஷ்ண மிஷன் கிளையின் திறப்பு விழா இன்று கொட்டகலையில்!

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை இராமகிருஷ்ண மிஷன் மலையகத்துக்கான முதலாவது கிளையை நுவரெலியா கொட்டகலை யில் இன்று (10) திங்கட்கிழமை திறந்து வைத்தது.

வரலாற்றில் முதல் தடவையாக மலையகத்தில் பகவான் இராமகிருஷ்ண ஆலயமும், சிவானந்த நலன்புரி நிலையமும் திறந்து வைக்கப்பட்டன.

இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன .

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

பிரதம அதிதியாக உலகளாவிய இராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடங்களின் துணைத்தலைவர் ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்த ஜி மகராஜ் கலந்து கொண்டார்.

இந்தியா காசி ராமகிருஷ்ண மடத் தலைவர் சுவாமி சர்வரூபானந்த ஜி மகாராஜ், மதுரை ராமகிருஷ்ண மடம் தலைவர் சுவாமி நித்யதீபானந்த ஜீ மகராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கும்பாபிஷேக கிரியைகளை சிவாகம கலாநிதி சிவஸ்ரீ கு. வை.க .வைத்தீஸ்வர குருக்கள் நடத்தி வைத்தார்.

இந்த நிலையத்தை அமைப்பதற்கு உதவிகளை விஜயபாலன் ரெட்டியார் லலிதா விஜயபாலன் தம்பதியர் வழங்கியிருந்தனர்.

நினைவு மலரும் வெளியிடப்பட்டது.













# மெல்ல கற்கும் மாணவருக்கான செயல்முறை பயிற்சி கற்பிட்டியில்

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

மெல்ல கற்கும் மாணவர்களின் ஆற்றல் ஆளுமைகளை வெளிக்கொண்டு வருவதற்கான செயல்முறைப் பயிற்சி கற்பிட்டி செடோ நெனசல அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (09) செடோ நெனசல பணிப்பாளர் ஏ.ஆர் முனாஸ் தலைமையில் இடம் பெற்றது.

இந்தச் செயல்முறை பயிற்சி கற்பிட்டி செடோ நெனசல முகாமையாளர் மற்றும் பயிற்றுவிப்பாளர் ஆகியோரின் மேற்பார்வையில் இடம்பெற்றது.



# வெருகல் பின்தங்கிய கிராமங்களில் வள்ளுவம் அமைப்பின் சேவைகள் !

(வி.ரி.சகாதேவராஜா)

வெருகல் பிரதேசத்திலுள்ள கல்லரிச்சல் பழங்குடியினர் மட்டித் தொழிலாளர் மற்றும் கருங்காலி சோலை ஆகிய மிகவும் பின்தங்கிய மூன்று ஊர்களில் வள்ளுவம் அமைப்பு வீடமைப்பு மற்றும் வாழ்வாதார உதவி வழங்குதல் போன்ற மனிதாபிமான உதவிகளைச் செய்து வருகிறது.

கடந்த வாரம் அவர்களுக்கு வீடுகள் ஒப்படைக்கப்பட்டன.

அவர்களுக்கு வீட்டு வசதிகள், வாழ்வாதார உதவிகள், மாதம் ஒரு முறை உலர் உணர்வுகள், வயோதிபர்களுக்கான உணவுகள் போன்றவற்றை வழங்கி வருகிறது.

வள்ளுவம் அமைப்பின் பணிப்பாளர் ஜெஸ்லனட் ராஜன் செல்வநாயகம் இந்த உதவிகளைச் செய்து வருகிறார்.

இது இவரின் நேரடிக் கண்காணிப்பில் நடந்து வருகின்றது.

கல்விக்கும் முக்கியத்துவம் கொடுத்து அவர்களைச் சமூகத்தில் ஒரு முன் மாதிரியாக வாழ்வதற்கு வழி வகுக்கிறது.

கல்லரிப்பு கிராமத்தில் பழங்குடி பிள்ளைகள் போக்குவரத்து பிரச்சினையால் பாடசாலைக்கு செல்லாது இருந்த நிலையில், இந்த அமைப்பு வாகன வசதிகளை ஒழுங்குபடுத்திக் கொடுத்து அவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்ல வழி எற்படுத்திக் கொடுத்துள்ளது.





# இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் துப்பாக்கிச் சூடு; 31 பேர் உயிரிழப்பு

இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் 31 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கி பிரயோகத்தில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர். இருவர் காயமடைந்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களை அடையாளம் காணும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கி பிரயோகம் நடந்த இடத்திலிருந்து பெருமளவான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# திருப்பதி லட்டு விவகாரம்: 4 பேர் கைது செய்யப்பட்டனர்

திருப்பதி லட்டு விவகாரம் தொடர்பாக திண்டுக்கல் தனியார் பால் பொருள்கள் தயாரிப்பு நிறுவனத்தைச் சேர்ந்தவர் உள்பட 4 பேரை சிறப்புப் புலனாய்வுக் குழு கைது செய்துள்ளது.

ஆந்திராவில் கடந்த ஜெகன்மோகன் ரெட்டி ஆட்சியில் நியமிக்கப்பட்ட திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு கொள்முதல் செய்த நெய்யில் தயாரிக்கப்பட்ட லட்டு பிரசாதம் தரமற்றதாக உள்ளது என புகார் எழுந்தது.

இந்நிலையில், ஆந்திராவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும், கோயிலின் புதிய நிர்வாக அதிகாரியாக சியாமள ராவ் நியமிக்கப்பட்டார். அவர் மேற்கொண்ட ஆய்வில் லட்டு பிரசாதம் தயாரிக்க பயன்படுத்தப்படும் நெய்யின் தரம் குறைவாக இருப்பதை அறிந்தார்.

அந்த நெய்யை குஜராத் மாநிலம், ஆனந்த் பகுதியில் உள்ள பரிசோதனை மையத்துக்கு அனுப்பி வைத்தார். கடந்த ஜூலை 17 ஆம் திகதி வந்த பரிசோதனை அறிக்கையில், “நெய்யில் மீன் எண்ணெய், மாடு மற்றும் பன்றிக் கொழுப்பு கலந்துள்ளது. இது தரமற்ற நெய்” என்று தெரிவிக்கப் பட்டது.



இதையடுத்து முந்தைய ஆட்சியின் கொள்முதல் விலைமனுவை சந்திரபாபு நாயுடு அரசு ரத்து செய்தது. கடந்த ஓகஸ்ட் முதல் அனைத்து பிரசாதங்களுக்கும் கர்நாடக அரசின் ‘நந்தினி’ நெய் பயன்படுத்தப்படுகிறது.

இந்நிலையில், ஜெகன் ஆட்சியில் திருப்பதி பிரசாதங்கள் தயாரிக்க விலங்குகளின் கொழுப்பு கலந்த நெய் பயன்படுத்தப்பட்ட தாக முதல்வர் சந்திரபாபு நாயுடு பகிரங்கமாக குற்றம் சாட்டினார். இது தேசிய அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

திருப்பதி லட்டு சர்ச்சை தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், திருப்பதி லட்டு கலப்பட விவகாரத்தில் ஆந்திரா அரசு அமைத்த விசாரணை குழுவுக்கு பதிலாக புதிய சுதந்திரமான சிறப்பு புலனாய்வுக் குழு (எஸ்.ஐ.டி) அமைக்க உத்தரவிட்டது. அதன்படி சி.பி.ஐ. 5 அதிகாரிகள் கொண்ட சிறப்பு குழுவை அமைத்தது. அதில் சி.பி.ஐ. தரப்பில் 2 அதிகாரிகள் ஆந்திர பொலிஸ் அதிகாரிகள் 2 பேர் உணவுத் தர கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவர் இடம் பெற்றிருந்தனர்.

இந்நிலையில், திருப்பதி லட்டு விவகாரம் தொடர்பாக திண்டுக்கல் தனியார் பால் பொருள்கள் தயாரிப்பு நிறுவனத்தைச் சேர்ந்தவர் உள்பட 4 பேரை சி.பி.ஐ. கைது செய்துள்ளது. உத்தராகண்ட் மாநிலம் ரூர்கியில் உள்ள போலே பாபா டெய்ரி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர்கள் பிபின் ஜெயின், பொம்மில் ஜெயின், வைஷ்ணவி டெய்ரி நிறுவனத்தின் சி.இ.ஓ. வினய் காந்த் சவுடா, திண்டுக்கல் தனியார் டெய்ரி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ராஜசேகரன் உள்பட 4 பேரை சிறப்பு புலனாய்வுக் குழு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இவர்கள் 4 பேரிடமும் 3 நாள்களாகவே சி.பி.ஐ. விசாரணை நடத்திவந்ததாகவும், விசாரணைக்கு இவர்கள் ஒத்துழைப்பு வழங்காத நிலையில் இவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெலுங்கு தேச கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



# தெருநாய் கடித்து 9 வயது சிறுவன் பலி

இந்தியாவின் கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை பகுதியில் தெருநாய் கடித்து 9 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

5 நாள்களுக்கு முன்னர் பாடசாலை செல்லும் போது அச்சிறுவனை தெருநாய் கடித்துள்ள நிலையில், இந்த விடயம் தொடர்பான மாணவன் யாரிடமும் தெரிவிக்காமல் இருந்துள்ளார்.

இந்நிலையில். நேற்று முன்தினம் திடீரென மூச்சித்திணறல் ஏற்படவே வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது தெருநாய் கடித்தது தெரியவந்துள்ளது. உயர் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் மேற்படி மாணவன் உயிரிழந்தள்ளார் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.





# லெபனானின் சுரங்கப் பாதை மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்!

லெபனானில் உள்ள சுரங்கப் பாதை ஒன்றின் மீது நள்ளிரவில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது.

சிரியா மற்றும் லெபனான் பகுதிகளை இணைக்கும் இந்த சுரங்கத்தினூடாக ஹிஸ்புல்லா அமைப்பு ஆயுதங்களைக் கடத்துவதாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டி வருகிறது.

நேற்றிரவு இஸ்ரேலின் விமானப் படையின் போர் விமானங்கள் லெபனானின் பெகா பகுதியில் அமைந்த சுரங்கப் பாதை மீதே வான்வழித் தாக்குதலை நடத்தியது.

கடந்த நாள்களிலும் இந்த சுரங்கப் பாதை மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த சுரங்கம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படாமல் தடுக்கும் வழிகளை மேற்கொள்வோம் என இஸ்ரேல் கூறியுள்ளது.

இஸ்ரேல் மற்றும் லெபனான் இடையே போர்நிறுத்த ஒப்பந்தமுள்ள சூழலில், இதனை மீறும் வகையில் இந்த தாக்குதல் அமைந்துள்ளதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

# திருமணம் செய்துகொள்ள பின்வாங்கும் சீனர்கள்

கடந்த ஆண்டு சீனாவில் திருமணங்கள் ஐந்தில் ஒரு பங்கு குறைந்துள்ளன என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஆண்டு திருமணத்திற்குப் பதிவு செய்த தம்பதிகளின் எண்ணிக்கை 6.1 மில்லியனாகவும், 2023 ஆம் ஆண்டு 7.68 மில்லியனாக இருந்ததாகவும் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

குழந்தை பராமரிப்பு மற்றும் கல்விக்கான அதிக செலவு காரணமாக திருமணம் செய்து கொள்வதற்கான ஆர்வம் குறைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



இதேநேரம் கடந்த சில ஆண்டுகளாக பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மந்தநிலை என்பவற்றின் காணரமாகவும் இளைஞர்கள் திருமணம் செய்துகொள்வதில் விருப்பம் காட்டவில்லை என தரவுகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே கடந்த ஆண்டு 2.6 மில்லியனுக்கும் அதிகமான தம்பதிகள் விவாகரத்துக்கு விண்ணப்பித்ததாகவும், இது 2023 ஆம் ஆண்டைவிட 1.1 வீதம் அதிகமாகும் என்றும் தரவுகள் குறிப்பிடுகின்றன.

# அமெரிக்க இறக்குமதி மீது இன்று முதல் சீனா நேரடி இறக்குமதி வரி விதிப்பு

சில அமெரிக்க இறக்குமதி மீது இன்று முதல் அமுலாகும் வகையில் சீனா நேரடி இறக்குமதி வரிகளை விதிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பல நாடுகள் மீது வரிகளை விதிக்கவுள்ளதாக அறிவித்துள்ள நிலையில், உலகின் இரண்டு பெரிய பொருளாதார நாடுகளுக்கிடையிலான வர்த்தகப் போர் தீவிரமடைந்து வருகிறது.

அனைத்து சீனப் பொருள்களுக்கும் அமெரிக்காவின் புதிய 10 சதவீத வரிகள் அமுலுக்கு வந்த சில நிமிடங்களுக்குப் பிறகு, கடந்த 4 ஆம் திகதி சீனா இந்த பதிலடி குறித்து அறிவித்திருந்தது.

இந்தநிலையில், அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் அனைத்து உலோக இறக்குமதிகளுக்கும் 25 சதவீத வரி விதிக்கவுள்ளதாக டொனால்ட் ட்ரம்ப் நேற்று ஊடகங்களுக்கு அறிவித்தார்.

அத்துடன், ஏனைய நாடுகள் மீது பரஸ்பர வரிகளை விதிக்கத் திட்டமிட்டுள்ளதாக கூறிய அவர் எந்தெந்த நாடுகள் குறிவைக்கப்படும் என்பதைக் குறிப்பிடவில்லை.



முன்னதாக கனடா மற்றும் மெக்சிகோ மீது 25 சதவீத வரிகளை விதிக்க திட்டமிட்டுள்ளதாக டொனால்ட் ட்ரம்ப் கடந்த வார இறுதியில் அறிவித்தார்.

எனினும், அந்த நாடுகளுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலையடுத்து ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்பாடுகளின் பின்னர் குறித்த தீர்மானம் கைவிடப்பட்டது.

கனடா முரசு
திங்கட்கிழமை 10/02/2025

**கழிவுக் குழியில் வீழ்ந்த மானை மீட்ட அதிகாரிகள்**

கனடாவின் ரொறன்ரோவில் கழிவுக் குழியொன்றில் வீழ்ந்த மானை அதிகாரிகள் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

வனவிலங்கு அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு 02

# பாதுகாப்பு செலவீனத்தை 20 சதவீதமாக உயர்த்தியுள்ள கனடா, ஐரோப்பிய நாடுகள்



**ஐரோப்பிய நாடுகளும் கனடாவும் கடந்த ஆண்டு பாதுகாப்பு செலவீனத்தை 20 சதவீதம் உயர்த்தியுள்ளதாக நேட்டோ தெரிவித்துள்ளது.**

**நேட்டோவின் ஐரோப்பிய உறுப்பு நாடுகள் மற்றும் கனடாவின் பாதுகாப்பு செலவினம் 2024 ஆம் ஆண்டில் முந்தைய ஆண்டை விட 20 சதவீதம் அதிகமாக இருந்ததாக, நேட்டோ அமைப்பின் பொதுச்செயலாளர் மார்க் ருட்டே தெரிவித்துள்ளார்.**

இது அமெரிக்காவின் அழுத்தத்திற்கு பதிலளிக்க ஒரு நடவடிக்கையாக கருதப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேட்டோ உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு செலவை அதிகரிக்க தொடர்ந்து அழுத்தம் வழங்கி வருகிறார்.

2022 இல் உக்ரைன் மீது ரஷ்யா தொடங்கிய தாக்குதல் காரணமாக பல நாடுகள் தங்கள் பாதுகாப்பு செலவுகளை அதிகரிக்க தொடங்கியுள்ளன.

2024 இல் ஐரோப்பிய நாடுகளும் கனடாவும் 485 பில்லியன் டொலர் வரை பாதுகாப்பிற்கு செலவிட்டுள்ளன.

2014 இல் நேட்டோ உறுப்பினர்கள் தங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) 2 சதவீதத்தை பாதுகாப்புக்காக செலவிட ஒப்புக்கொண்டனர்.

தற்போது நேட்டோ -வின் 32 உறுப்பினர்களில் 23 நாடுகள் இந்த 2 சதவீத இலக்கை எட்டியுள்ளன.

ஆனால் ட்ரம்ப் 5 சதவீதம் செலவிட வேண்டும் என்று அண்மையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேட்டோ தரவுகளின்படி, கடந்த ஆண்டு, நேட்டோ உறுப்பு நாடுகளின் அனைத்து பாதுகாப்பு செலவினங்களிலும் மூன்றில் இரண்டு பங்கு அமெரிக்கா கணக்கில் இருந்தது.

பிப்ரவரி 14 அன்று நேட்டோ பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு நடைபெறவுள்ளன, இதில் அமெரிக்காவின் புதிய பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத் முதல் முறையாக கலந்து கொள்கிறார்.

இந்த நேட்டோ கூட்டத்தில் மேலும் விரிவான தகவல்கள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முடிவாக, நேட்டோ -வின் பாதுகாப்பு செலவு தொடர்ந்து உயர்ந்து வரும் நிலையில், அமெரிக்காவின் புதிய கோரிக்கைகள் மற்றும் மற்ற உறுப்பினர்களின் எதிர்வினை குறிப்பிடத்தக்கதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கனடிய சந்தைகளில் இருந்து மீள பெறப்படும் வாகனங்கள்

கனடாவின் சந்தைகளில் இருந்து டொயோட்டா மற்றும் போர்ட் ரக வாகனங்கள் சில மீள பெற்றுக் கொள்ளப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய போக்குவரத்து நிறுவனம் குறித்த வாகனங்கள் தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

டொயோட்டா நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் நான்கு வகையான வாகனங்கள் இவ்வாறு சந்தையிலிருந்து மீள பெற்றுக் கொள்ளப்படுகின்றன என அறிவிக்கப்படுகின்றது.

கடந்த 2023 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்கள் இவ்வாறு மீளப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

டொயோட்டா டொமெகா, டொயொட்டா ஹைலண்டர், டொயொட்டா கொரோலா மற்றும் டொயொட்டா க்ரோஸ் ஆகிய நான்கு வகைகளே இவ்வாறு சந்தையில் இருந்து மீள பெற்றுக் கொள்ளப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாகனங்களின் ஸ்டியரிங் ஏர்பேக் போன்ற



சிலவற்றில் காணப்படும் குறைபாடுகளின் அடிப்படையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, போர்ட் நிறுவனத்தின் சில வகைகளும் சந்தையில் இருந்து மீள பெற்றுக்கொள்ளப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.



# மார்க்கம் பகுதியில் இடம்பெற்ற தீ விபத்தில் சிக்கி ஒருவர் பலி

கனடாவின் மார்க்கம் பகுதியில் இடம்பெற்ற தீ விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுமார் 70 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரே இவ்வாறு தீ விபத்தில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். பில்லர் ரொக் மற்றும் ஹெஸெல்டென் வீதிகளுக்கு அருகாமையில் இந்த வீடு தீ விபத்துக்கு உள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களும் தீப்பற்றிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த வீட்டில் இருந்த பெண் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட பெண் வீட்டில் மற்றுமொருவர் இருக்கின்றார் என கூறியுள்ளார். இதனை தொடர்ந்து தீயணைப்பு படையினர் வீட்டிற்குள் சென்று தேடிய போது நபர் ஒருவர் இருப்பதனை அவதானித்து உள்ளனர்.



எனினும் குறித்த நபர் தீ விபத்தில் உயிரிழந்து விட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

தீ விபத்திற்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



## கழிவுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி மானை மீட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 30 அடி ஆழமான கழிவுக் குழிக்குள் மான் சிக்கிக் கொண்டிருந்தது என தெரிவிக்கப்படுகிறது.

அதிகாரிகள் மானை மீட்க மேற்கொண்ட முயற்சியின் போது அந்த மான் பதற்றமடைந்து தப்பிக்க முயற்சித்ததாகவும் இதனால் மீட்கும் பணிகள் சவால் மிக்கதாக மாறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மீட்பு பணி காட்சிகள் உள்ளடங்கிய காணொலி ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. இரண்டு மிருக வைத்தியர்களும் இந்த மீட்பு பணியில் இணைந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 200 பவுண்டு எடையுடைய மான் ஒன்றே இவ்வாறு பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மான் எவ்வாறு இந்த கழிவுக் குழிக்குள் விழுந்தது என்பது பற்றிய தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

மேற்படி மானுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டிருந்ததாகவும், காயங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கனடாவின் வேலையின்மை விகிதம் எதிர்பாராத விதமாக மீண்டும் சரிவு



கனடாவின் வேலையின்மை விகிதம் எதிர்பாராத விதமாக மீண்டும் சரிவடைந்துள்ளதுடன், நாட்டின் பொருளாதாரம் உறுதியான வேலைவாய்ப்புகளைப் பதிவு செய்துள்ளதாக வெளியான தரவுகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

ஜனவரியில் வேலையின்மை விகிதம் 6.6 சதவிகிதமாக பதிவாகியுள்ளது. இது முந்தைய மாதத்தில் 6.7 சதவிகிதம் என பதிவாகியிருந்தது. மட்டுமின்றி, ஜனவரி மாதத்தில் மட்டும் 76,000 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பரில் இந்த எண்ணிக்கை 91,000 என இருந்தாலும், தற்போதைய நெருக்கடியான சூழலில் 76,000 வேலைவாய்ப்புகள் என்பது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்றே கூறப்படுகிறது.

வேலையின்மை விகிதம் சரிவடைவது இது தொடர்ச்சியாக இரண்டாவது மாதம் என்றே கூறுகின்றனர். இருப்பினும், கனடாவில் தற்போது வேலையற்றவர்கள் எண்ணிக்கை 1.5 மில்லியன் என்ற உச்சத்தில் உள்ளது.

சமீபத்திய வேலைவாய்ப்பு வளர்ச்சி இருந்தபோதிலும், வேலையில்லாதவர்கள் பலர் வேலை தேடுவதில் தொடர்ந்து சிரமங்களை எதிர்கொள்வதை இது குறிப்பதாக கூறுகின்றனர்.

பெரிய வட்டி விகிதக் குறைப்புக்கள் நுகர்வோர் செலவினங்களையும் வணிக முதலீட்டையும் அதிகரிக்கத் தவறியதால், கடந்த ஆண்டின் பெரும் பகுதியில் கனடாவின் பொருளாதாரம் தடுமாறிய நிலையிலேயே காணப்பட்டது.

இந்த நிலையில், டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தால் வரி விதிப்புகள் அமுலுக்கு வரும் என்றால், கனடா வங்கி வட்டி விகிதங்களை தொடர்ந்து குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றே பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், கடந்த ஆண்டு அதிக வேலையின்மை விகிதத்துடன் நீண்ட காலமாக பலவீனமாக காணப்பட்ட இளைஞர்கள் அல்லது 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்களுக்கான வேலைவாய்ப்பு 1.1 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

இந்தப் பிரிவில் வேலையின்மை விகிதம் 14.2 சதவிகிதத்தில் இலிருந்து 13.6 சதவிகிதமாகக் குறைந்தது. நிரந்தர ஊழியர்களுக்கான சராசரி மணி நேர ஊதிய வளர்ச்சி 3.7 சதவிகிதமாக இருந்தது, இது டிசம்பரில் திருத்தப்பட்ட 3.8 சதவிகிதத்தில் இருந்து சற்று குறைவாகும்.

# ஐரோப்பிய ஒன்றியத்துடன் உறவுகளை வலுப்படுத்துவதற்கு கனடா திட்டம்






அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கனடா மற்றும் மெக்ஸிகோவை குறிவைத்து புதிய வரிகளை விதிக்க மிரட்டிய நிலையில், கனடா தனது வர்த்தக உறவுகளை ஐரோப்பிய ஒன்றியத்துடன் (EU) மேலும் வலுப்படுத்த திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக கனடாவின் வர்த்தக அமைச்சர் மேரி என், ஜெனீவாவில் உலக வர்த்தக அமைப்பு தலைவர் ந்கோஸி ஒகோஞ்சோ - இவேலா உடன் சந்தித்து பேசியுள்ளார்.

பின்னர், ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக பிரதிநிதி மரோஸ் செப்கோவிச் உடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

2017 முதல் கனடா - ஐரோப்பிய ஒன்றியம் இடையே இலவச வர்த்தக ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளது.

இந்த ஒப்பந்தத்தால் இரு தரப்பினருக்கும் வர்த்தக உள்வழி 65 வீதம் அதிகரித்துள்ளது.

2021-இல் கனடா - ஐரோப்பிய ஒன்றியம் இடையே மூலப்பொருள் கூட்டணியும் ஏற்படுத்தப்பட்டது.

கனடாவின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்கள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குள் நுழைய அதிக ஆதரவு பெற வேண்டும் என மேரி என் கூறியுள்ளார்.

முக்கிய கனிமங்கள் - கொபால்ட், லித்தியம், நிக்கல் போன்றவை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு அவசியமானவை.

கனடா சீனாவால் உண்டாகும் பொருளாதார சார்பை குறைப்பதற்காக இந்த பொருட்களை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வழங்க ஆர்வம் காட்டுகிறது.

2018-இல் கனடா, அமெரிக்காவிற்கு குறைவான நம்பிக்கை வைக்க 50 வீதம் அதிக இருபுற வர்த்தக வளர்ச்சி நோக்கமாகக் கொண்டது.

கனடா தற்போது இந்தோ - பசிபிக் நாடுகளுடன் இணைந்து வர்த்தக ஒப்பந்தங்களை விரிவுபடுத்தி வருகிறது.

கடந்த டிசம்பரில் இந்தோனேசியா, எக்வடார் போன்ற நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

கனடா-ஏசியா வர்த்தக வலயத்துடன் நெருங்கிய ஒத்துழைப்பு மேற்கொண்டு வருகிறது.

அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், புரூனை போன்ற நாடுகளுக்கான வர்த்தக தூதுக்குழுவை கனடா இந்த வாரம் அனுப்புகிறது.

டொனால்ட் டிரம்ப் கடந்த வாரம் கனடா மற்றும் மெக்ஸிகோவின் ஏற்றுமதிகளை குறைக்க 25% வரி விதிக்க திட்டமிட்டார்.

கனடா இதற்கு பதிலடி தர, உலக வர்த்தக அமைப்பில் வழக்கு தொடரும் வாய்ப்புகளை ஆராயவுள்ளது.

கனடாவின் முக்கிய பொருளாதார துறைகள் பாதிக்கப்படும் என்பதால், ஐரோப்பிய ஒன்றியத்துடன் பொருளாதார உறவை வலுப்படுத்துதல் அவசியம் என மேரி என் குறிப்பிட்டார்.

கனடா - ஐரோப்பிய ஒன்றிய இணைப்பு, அமெரிக்காவின் வரித்துறைகளால் ஏற்படும் விளைவுகளை சமாளிக்க உதவும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.